அடிபணியாதே! ஆர்ப்பரித்தெழு!! அநீதி ஒழி!!!





## தமிழக முதல்வர் அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி அருந்ததியர்களுக்கான

## 3% உள் இட ஒதுக்கீட்டை உயர்த்தி 6 விழுக்காடாக வழங்கிட கோரி

## தமிழகம் தழுவிய

# தொடர் முழக்க போராட்டம்

நாள் : 02.12.2011, வெள்ளிக்கிழமை 9.00 மணி
இடம் : மார்க்கெட் திடல், திருநெல்வேலி.





இந்த இழிவு நிலையை போக்கிட இட ஒதுக்கீட்டை வென்றெடுப்போம்

இட ஒதுக்கீடு நம் உரிமை

அது நம்மை வழிநடத்துகிற ஆயுதம்

அதுவே சமநிலை சமுதாயத்தை அமைப்பதற்கான அடிப்படை

அந்த இட ஒதுக்கீட்டை காப்பது நம் ஒவ்வொருவரின் கடமை

## தோழமை மிக்க தமிழ் சொந்தங்களே!

இந்துத்துவ (வர்ணாசிரம்) சாதிய சமூகத்தில், எந்த சாதியைச் சொல்லி பின்னுக்குத் தள்ளி, சாதியத் தீண்டாமைகளையும், இழிதொழில்களையும் திணித்தார்களோ, கல்வி, வேலை வாய்ப்பு, அதிகாரம், உடைமை கொள்ளுதல் போன்றவற்றை மறுத்தார்களோ, அந்த சாதியின் பெயராலேயே, அந்தந்த சாதிகள் அடைந்த பின்னடைவை கணக்கில் கொண்டு அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை அளிப்பதுதான் இட ஒதுக்கீடு என்ற அரசியல் சட்டஉரிமை.

ஒரு சாதிக்கு ஒரு தொழில் என விதித்தது மனு (அ) தருமம். மனு தருமத்துக்கு மாறாக எல்லா சாதியும் எல்லா தொழிலிலும் என உரிமை கோரியது அம்பேத்கரியம். அம்பேத்கரியத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட இட ஒதுக்கீடு வெறுமனே தாழ்த்தப்பட்டோருக்கு மட்டுமல்லாமல் ; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ; சிறுபான்மையினர், பெண்கள் என அனைவருக்குமே உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக அளவில் சாதிய அமைப்பினால் வஞ்சிக்கப்பட்ட சாதிகளை நான்கு தொகுப்புகளாக்கி பிற்படுத்தப்பட்டோருக்கு 30% மிகவும் பிற்படுத்தப்பட்டோருககு 20% தாழ்த்தப்பட்டோருக்கு 18% பழங்குடியினருக்கு 1% என வழங்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு தொகுப்பிலும் முன்னேறிய சாதிகள் மட்டுமே இடஒதுக்கீட்டை அனுபவித்து வந்ததால் ஒவ்வொரு தொகுப்பிலும் வஞ்சிக்கப்பட்ட சாதிகள் உள் இட ஒதுக்கீடு கோரி வந்தன.

அது போன்ற நியாயங்களின் அடிப்படையில்தான் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் பள்ளர், பறையர், சக்கிலியர் உள்ளிட்ட 76 சாதிகளை கணக்கிலெடுத்து மக்கள் தொகைக்கேற்ப ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட 18% இட ஒதுக்கீட்டை நாம் இதுவரை முழுமையாக அனுபவித்தது கிடையாது. நெடுங்காலமாக பல்வேறு அருந்ததியர் இயக்கங்கள் சமூக நீதி இடது சாரி சக்திகளின் துணைகொண்டு சமூகநீதியில் சமநீதி என்னும் அடிப்படையில் வஞ்சிக்கப்பட்ட சக்கிலியர்களுக்கு கடந்த ஏப்ரல் 2009 ல் 3% உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. 2009 – 2010, 2010 – 2011 ல் இரு கல்வி ஆண்டுகளில் 60 ஆண்டு காலம் மறுக்கப்பட்டு வந்த சமூக நீதிக்காற்றை இப்போது சற்றே சுவாசிக்கத் தொடங்கிய அருந்ததிய மாணவர்களுக்கும் அரசு அலுவலகங்களில் ஓரிரு இடங்களை அலங்கரித்த அருந்ததியர் இளைஞர்களுக்கும் பேரதிர்ச்சி தரும் வகையில் மூளை முழுவதும் பார்ப்பினிய சிந்தனையில் ஊறிபோன ஆதிக்க தலித்துகள் உயர்நீதிமன்றத்தில் உள் இட ஒதுக்கீட்டுக்கு தடைகோரி வழக்கு தொடர்ந்துள்ளனர்.

## உள்இட ஒதுக்கீட்டை பறிக்க நினைக்கும் ஐந்தறிவு ஜந்துக்களுக்கு!

மனித சமூகமே செய்ய மறுக்கின்ற இழிதொழிலான மனிதனின் மலம், மூத்திரம், சளி, நஞ்சு, எலி, பூனை, நாய்கள் என செத்து மிதக்கும் பாதாளசாக்கடை துர்நாற்றமெடுக்கும், கழிவுநீர் சாக்கடை, அருவருக்க தக்கதான செப்டிக் டேங்க், இவற்றையெல்லாம் சுத்தப்படுத்தி, எந்தவித பிரதிபலன் பாராமல் நாறும் மலக்கிடங்கில் நாள் தோறும் உயிரை விடுகின்ற அருந்ததியருக்கு உள் இட ஒதுக்கீடு கொடுக்க கூடாது. என்று சொல்ல எவனுக்கும் அருகதை இல்லை.

அம்பேத்கரின் படத்தைப் போட்டு அச்சிடுவதாலேயே அம்பேத்கரிஸ்டுகள் ஆகிவிட முடியாது. **நான் யாருக்கும் அடிமை இல்லை. யாரும் எனக்கு அடிமை இல்லை** என்று முழங்கவும் தயாராக இருக்க வேண்டும். தனக்கு கீழே ஒரு சக்கிலியனை அடிமையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற பார்ப்பனிய சிந்தனை கொண்ட ஆதிக்க தலித்துக்கள் மூலம் விடப்பட்டிருக்கின்ற இச்சவாலை அரசின் ஒத்துழைப்போடு, தீவிரமான போராட்டங்களால் முறியடிப்போம். இன்றைய ஆளும் அரசு தனது 2011 ல் தேர்தல் அறிக்கையில் அருந்ததியருக்கான 3% உள் இடஒதுக்கீட்டை 6% உயர்த்தி தருவேன் என்று கூறியுள்ளார்.

மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், வழக்குகள், சிறைகள் என பல தியாகங்களை கடந்து பெற்றுள்ள இந்த உள் ஒதுக்கீட்டை பாதுகாத்து மேலும் உள்இடஒதுக்கீட்டை 6% கிடைக்க பாடுபடுவது அருந்ததிய சமூகத்தின் தலையாய கடமையாகும். தனி நபர்கள் மட்டுமல்லாது நம்முடைய ஒட்டுமொத்த சமூகத்தை தூக்கி நிறுத்துகின்ற 100 ஆண்டுகள் கழித்து நம் எதிர்கால தலைமுறைக்கு தேவையான வாழ்வாதார ஜீவாதாரா உள் இட ஒதுக்கீட்டிற்கெதிரான இச்சிக்கலை ஓரணியில் எதிர்கொள்ள நாம் போராடி பெற்ற அருந்ததியர்களின 3% உள் இட ஒதுக்கீட்டை உயர்த்தி 6% பெற்றிட தமிழக தழுவிய தொடர் முழக்க போராட்டத்திற்கு அருந்ததிய தமிழ் சொந்தங்களே உள் இட ஒதுக்கீட்டை பாதுகாத்திட, போராட்டத்திற்கு வாரீர், வாரீர் என **ஆதித்தமிழர் பேரவை** உரிமையுடன் அழைக்கிறது.

*தமிழக அரசே!!*

- ***அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 3% உள் இட ஒதுக்கீட்டை உயர்த்தி 6% வழங்கி இட ஒதுக்கீட்டிற்கு பாதுகாப்பு கொடு!***
- ***மாமன்னர் ஒண்டி வீரன் நினைவு மணிமண்டபம் கட்டும் பணியை துரிதப்படுத்தி மணிமண்டபத்தில் குதிரையுடன் கூடிய முழு உருவ சிலையை அமைக்கக்கோரி!***

**தான் பிறந்த சமுதாயத்தின் விடுதலைக்காக நீ போராடவில்லையென்றால் நீதான் உன் சமுதாயத்தின் முதல் சாபக்கேடு** - புரட்சியாளர் அம்பேத்கர்

களப்பணியில் **ஆதித்தமிழர் பேரவை** நெல்லை மாவட்டம்

தொடர்புக்கு 9025754138, 9442362307, 9865390801, 9626626665, 8015692757, 95247 52503

சமத்துவம் என்பது சமமாக நடத்தப்படுவது அல்ல
சம வாய்ப்புகளை அளிப்பது. - (ஏங்கல்ஸ்)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் :

## மாநகர, ஒன்றிய, கிளை, பொறுப்பாளர்கள்

# ஆதித்தமிழர் பேரவை,

நெல்லை மாவட்டம்


பேச : 9025754138, 9442362307, 9865390801, 9626626665, 8015692757, 95247 52503
email : aathitamilarperavai@gmail.com


---

ஆதித்தமிழர் விடுதலையே! அனைவருக்கும் விடுதலை!









**டிசம்பர் – 2 நெல்லையில்**

**தமிழக அரசு 2011 தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி**
**அருந்ததியருக்கான 3% உள் இட ஒதுக்கீட்டை**
**6 விழுக்காடாக உயர்த்தி வழங்கிட கோரி...**

*தமிழகம் தழுவிய*

மாபெரும்

# தொடர் முழக்கப் போராட்டம்

இடம் : **சவகர் திடல்,**
நாள் : **02.12.2011**, நேரம் : காலை **11.00** மணி

## நிகழ்ச்சி நிரல்

தலைமை : **க.ந. சுந்தர்ராசு** (மாவட்ட தலைவர்)

## முன்னிலை :

தோழர். **கு.கி. கலை கண்ணன்** (மாவட்ட செயலாளர்)

தோழர். **க. கண்ணம்மாள்** (மாவட்ட து. செயலாளர்)

தோழர். **பெ. பாரத்** (மாவட்ட தலைமை நிலைய செயலாளர்)

தோழர். **பெ. சண்முகசுந்தரம்** (மாவட்ட நிதி செயலாளர்)

தோழர். **க. காலேப்** (மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர்)

தோழர். **க. ஆதிசக்தி** (மாவட்ட அமைப்பு செயலாளர்)

## வரவேற்புரை :

தோழர். **சு. வேலாயுதம்** (மாநகர செயலாளர்)

## உரைவீச்சு :

தோழர். **கே.எம். நிஜாம்** (ம.தி.மு.க)

தோழர். **வியனரசு** (பாட்டாளி மக்கள் கட்சி)

தோழர். **M.C. கார்த்திக்** (மா.செ. விடுதலை சிறுத்தைகள்)

தோழர். **பழனி** (மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட், மா.செயலாளர்)

தோழர். **நெல்லையப்பன்** (தமிழக மக்கள் முன்னேற்ற கழகம்)

தோழர். **வே.ச. முத்துக்குமார்** (தேவேந்திர வேளாளர் கூட்டமைப்பு)

தோழர். **பரூக்** (மனித நேய மக்கள் கட்சி)

தோழர். **ரசூல் மைதீன்** (த.ம.மு.க)

தோழர். **காசிராசன்** (பெரியார் திராவிட கழகம், மா.செயலாளர்)

தோழர். **பரதன்** (மனித உரிமை களம்)

தோழர். **உத்திரன்** (புரட்சிகர இளைஞர் முன்னணி)

தோழர். **வீரப்பன்** (மத்திய மாநில SC (A) அரசு ஊழிய கூட்டமைப்பு)

தோழர். **செந்தில்குமார்** (நாம் தமிழர் கட்சி)

தோழர். **முத்துமாரி** (அருந்ததியர் பெண்கள் எழுச்சி இயக்கம்)

தோழர். **லேனா குமார்** (யாதுமாகி)

## கோரிக்கை விளக்கவுரை :

தோழர். **தமிழ்வளவன்** (மா.பொறுப்பாளர்)

தோழர். **தமிழ்மாறன்** (மா.பொறுப்பாளர்)

தோழர். **இளமாறன்** (மா.பொறுப்பாளர்)

தோழர். **கதிரவன்** (மா.பொறுப்பாளர்)


## நிறைவுரை :

தோழர். **சாக்கியரசு** (மாநில வழக்கறிஞர் அணி)

## நன்றியுரை :

தோழர். **இரா. இளஞ்செழியன்** (மாவட்ட பொறுப்பாளர்)

நெல்லை - மாலைமுரசு - ~~டிசம்பர்~~ 2.12.2011




அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்த கோரி பாளை மார்க்கெட் திடலில் ஆதி தமிழர் பேரவையினர் தொடர் முழக்க போராட்டம் நடத்தினர். அதனை படத்தில் காணலாம்.

# ஆர்ப்பாட்டம்

நெல்லை, டிச.2–

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறியதுபோல் அருந்ததியருக்கான 3சதவீத உள்இடஒதுக்கீட்டை 6சதவீதமாக உயர்த்தக்கோரி ஆதித்தமிழர் பேரவை சார்பில் பாளை மார்க்கெட் திடலில் இன்று அர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், தலைமை நிலைய செயலாளர் பாரத், கொள்கை பரப்பு செயலாளர் காலேப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர செயலாளர் வேலாயுதம் வரவேற்று பேசினர் . மனிதநேய மக்கள் கட்சி பருக், விடுதலை சிறுத்தைகள் கட்சி கர்த்திக், ஆதித்தமிழர் பேரவை மாநில நிர்வாகி தமிழ்வளவன், தமிழ்மாறன், இளமாறன் மாவட்ட பொறுப்பாளர் இளஞ்செழியன் உள்பட பலர் கலந்துகொண்டனர். ஆதித்தமிழர் பேரவையின் மாநில வக்கீல் அணி தலைவர் சாக்கியரசு சிறப்புரை ஆற்றினார்.



பாளை ஜவஹர் திடலில் ஆதிதமிழர் பேரவையினர் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழ் முரசு - நெல்லை - 2.12.2011

# ஆதிதமிழர் பேரவை- புதிய தமிழகம் நிர்வாகிகள் நெல்லையில் மோதல்

நெல்லை, டிச.2-

ஆதிதமிழர் பேரவை நிர்வாகிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் புதிய தமிழகம் கட்சியினர் திடீரென வந்து தகராறு செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஆதிதமிழர் பேரவை சார்பில் அருந்ததியினருக்கான 3 சதவீத உள் இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்தி வழங்ககோரி இன்று பாளை மார்க்கெட் திடலில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாவட்ட தலைவர் சுந்தர்ராஜ் தலைமை வகித்தார். மாவட்ட செய லாளர் கலைக்கண்ணன், துணை செயலாளர் கண்ணம்மாள் மற்றும் சண்முகசுந்தரம், பாரத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் சாச்சியரசு, மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் பழனி, விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் கார்த்திக், மமக மாவட்ட தலைவர் பாரூக், செயலாளர் ரசூல்மைதீன், அரசு ஊழியர் கூட்டமைப்பு வீரப்பன், அருந்ததியினர் பெண்கள் எழுச்சி இயக்கம் முத்துமாரி ஆகியோர் பேசினர்.

இதற்கிடையில் அருந்தயினருக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு கொடுக்க கூடாது என்று கூறிய புதியதமிழகம் கட்சி

## ஆர்ப்பாட்டத்தில் பரபரப்பு

தலைவர் கிருஷ்ணசாமி எம்எல்ஏவை கைது செய்யவேண்டுமென்று ஆதிதமிழர் பேரவை மாநில தலைவர் அதியமான் பேசினார். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் புதிய தமிழகம் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் இன்று திரண்டனர்.

நெல்லை மாவட்ட புதிய தமிழகம் கட்சி செயலாளர் செல்லப்பா தலைமையில் 25க்கும் மேற்பட்டவர்கள் வந்தனர். இதனால் இருதரப்பினரிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உரு வானது. இதனைதொடர்ந்து பாளை இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் தலைமையில் அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர்.

தகராறு செய்தவர்களை கைது செய்வதற்காக போலீஸ் வாகனம் வரவழைக்கப்பட்டது. புதிய தமிழகம் கட்சியினரிடம் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் "நீங்கள் தகராறு செய்தால் உங்களை கைது செய்வேன். அவர்கள் அனுமதி பெற்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்" என்று எச்சரித்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர் கள் கலைந்து சென்றனர்.

வரி விளம்பரம்

பொது / தனிநபர்
வீட்டு உபயோக பொருட்கள்
மருத்துவம்

குழாயில் அடைப்பா?
97511 73317

பொது / தனிநபர்
மருத்துவம்
வெண்புள்ளிகளா?
சொரியாஸிஸ்?

Mech @ Power
NDT Course
ASNT-Level II

JCB
99659 74483

BL – LLB

FIRE & SAFETY
SAFETY OFFICER
6500/-
98657 34545

மாந்திரீகம்
கல்யாண வரன்



## அரசின் இலவச திருமண திட்டத்திற்காக

# ஜோடிகளை தேடி அலையும் அறநிலையத்துறை ஊழியர்கள்



## தினகரன்

### மகாதீர் மருந்துச்சீட்டு

## ஆதிதமிழர் பேரவை ஆர்ப்பாட்டத்திற்கு

# புதிய தமிழகம் எதிர்ப்பு


### நெல்லையில் போலீஸ் குவிப்பு



# நெல்லையில் 12 பேர் உடல் தானம்

## திருச்செந்தூரில் பரிதாபம்

# ஐயப்ப பக்தர்கள் வேன் ஏறியதில் உடல் நசுங்கி குழந்தை பலி




2697